[1987 நவம்பர் 17

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: நம்முடைய மாநிலத்திற்கு கடன் வழங்கவேண்டிய அந்தப் பணி எல்.ஐ.சி.க்கு உண்டு. எனவே அது வேறு பிரச்சினை, இது வேறு பிரச்சினை. இருந்தாலும் இரண்டையும் அரசு பரிசீலிக்கிறது. இந்த இரண்டிலும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை செல்வபுரத்திலே உள்ள பிரச்சினைகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அந்தப் பகுதியிலே வீட்டுவசதி வாரியத்தினால் விடப்பட்டிருக்கும் ரிசர்வ் சைட்-லே நூற்றுக்கணக்கான குடிசைகள் போடப்பட்டு பல ஆண்டுகளாகியிருக்கின்றன. அவைகளிலே ஒரு குடிசையைக்கூட அதிகாரிகள் அகற்றவில்லை. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள வீட்டுவசதி வாரியக் கட்டிடங்களில் கழிப்பிடங்கள், செப்டிக் டேங்க் நாற்றமடிக்கின்ற நிலையில் இருக்கின்றன சுகாதாரமற்ற கேடுற்ற நிலைமையில் இருக்கின்றன. அங்கு பல வீடுகள் பழுதடைந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் அரசு செப்பனிடுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குறைபாடுகளைக் களைய வீட்டுவசதி வாரியத்திற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்படும்.

இலவச காது கேட்கும் கருவிகள்.

165—(*வினா எண் 633) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985 ஆம் ஆண்டில் காதுகேளாத குழந்தைகள் இதரர்களுக்கு இலவச காது கேட்கும் கருவி எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் எத்தனை பேருக்கு வழங்க அரசு திட்டம் தீட்டியுள்ளது?

1987 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 41.68 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 10,415 நபர்களுக்கு இலவசக் காது கேட்கும் கருவிகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காது கேட்கும் கருவிகள் இலவசமாக வாங்குவதற்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும்? இந்த முகாம் எங்கெங்கே நடக்கிறது என்று சரியான முறையில் சமூகநலத் துறையில் விளம்பரம் இல்லை. அதை நல்லமுறையில் விளம்பரப் படுத்தி இந்த காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா? வெளி மார்க்கெட்டில் சுமார் ரூ. 600, ரூ. 900, ரூ. 2,000 வரையில் விலைக்கு விற்கிறது. சின்னக் கருவிதான். இந்தக் கருவியை அரசு ஒரு நிறுவனத்தின் மூலமாகத் தயாரித்து குறைந்த விலைக்குக் கிடைக்க வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காதொலிக் கருவிகளை இலவசமாகப் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். முழுமையாக அல்லது அரைகுறையாக காது கேளாத அனைவரும் அந்த காதொலிக் கருவியைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆகின்றார்கள். இரண்டாவது, வல்லுநரின் மதிப்பீட்டின்படி விண்ணப்பதாரருக்கு காது கேளாத நிலை இருக்கிறது, அவருக்குக் காது கேட்கும் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று ஒரு ஆய்வு அறிக்கையைப் பெறவேண்டும். மூன்றாவது, விண்ணப்பதாரர் காதொலிக் கருவியை ஏற்கெனவே உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இருந்து காதொலிக் கருவியைப் பெற்றவராக இருக்கக்கூடாது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இதர திட்டங்களில் காது ஒலிக் கருவி பெற்றவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் இலவசமாக காதொலிக் கருவி பெற இயலாது. மனுதாரரோ அல்லது மனுதாரருடைய பெற்றோர் அல்லது பாதுகாவலருடைய மாத வருமானம் ரூபாய் ஆயிரத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். பள்ளி செல்லும் குழந்தை களுக்கும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் முன் உரிமை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு இலவசமாகக் காதொலிக் கருவிகள் வழங்க

வேண்டும் என்று நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இந்த காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வெளிசசந்தையில் ஒவ்வொரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அவரவர்களுடைய விலையில் விற்றுக்கொண்டிருக் கின்றார்கள். நாம் காதொலிக் கருவியைத் தயாரித்து விற்பது என்பது அவ்வளவு முடியாத காரியம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த எண்ணம் பரிசிலிக்கப்படும்.

சத்துணவு மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றல்.

166—(*வினா எண் 13398) திரு. க. சோலைராசு மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்போது அமைப்பாளர்கள் அரசு ஊழியராக அறிவிக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 2 - 4 வயதான குழந்தைகளுக்கென இயங்கி வரும் 23,366 முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்ட மையங்களில் 19,140 மையங்கள் நர்சரி பள்ளிகளாக ஏற்கனவே மாற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் (1987-88), மேலும் 3,500 குழந்தைகள் நல மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்ற ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) நர்சரி வகுப்பினை நடத்துவதற்கு அமைப்பாளர் களுக்கு பள்ளிக்கல்வி துறையால் தேர்வு செய்யப்பட்ட ஆதாரப் பயிற்சியாளர்களைக் (Key Resource persons) கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட்ட 3,500 மையங்களில், அமைப்பாளர் களுக்குப் பயிற்சி மேற்கொள்ளப்பட இருக்கிறது. அமைப் பாளர்களை முழு நேர அரசு ஊழியர்களாக அறிவிக்கும் செயற் குறிப்பு எதும் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS